**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.97/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | ராஜேஷ் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of November 2021.

நான் எடுப்பூரில் வசித்து வருகிறேன். மைக்செட் வைத்து உள்ளேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும். யாரிடம் எப்போது எதற்காக போட்டு கொடுத்தேன் என தெரியாது. வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கு பற்றி போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

30.07.2015 ம் தேதி சம்பவ இடமான வாதியின் வீட்டையும் அதன் சுற்றுபுறங்களையும் மூன்றடைப்பு காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.97/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 5<br>Defense<br>Court |
| Name | செல்லபாண்டி நாடார் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of November 2021.

நான் எடுப்பூரில் வசித்து வருகிறேன். விவசாயம் பார்த்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் என்னுடைய மனைவி. ஆஜர் எதிரியை தெரியும் என்னுடைய மூத்த மகன், பொன்ரேகா என்னுடைய மருமகள். 28.07.2015 ஆம் தேதி காலை 7.00 மணியளவில் எதிரிகள் அ.சா.1யை அடித்துவிட்டதாக என்னுடைய போனில் சொன்னார்கள். நான் கிணற்றிற்கு சென்றிந்தேன். 1 - வது எதிரி அ.சா.1 ன் முடியை பிடித்து தெருவில் இழுத்து சென்றதாக என்னுடைய மற்ற இருமகன்கள் சொன்னார்கள். சொத்தில் பிரித்து கொடுக்காததால் அ.சா.1யை எதிரிகள் அடித்தார்கள். கடன்கள் இருந்ததால் சொத்தை நான் பிரித்து கொடுக்கவில்லை. நான் வந்து பார்த்த போது அ.சா.1 க்கு வலது காலில் காயம் இருந்தது. நான் ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1 வது எதிரிக்கு ஆறு மரக்கா நிலம் கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை. நீங்களும் உங்கள் மனைவியும் 2 வது எதிரி பொன்ரேகாவின் நகைகளை அடகு வைத்தீர்கள் என்றால் ரூ. 2,50,000/- த்திற்கு அடகு வைத்து திருப்பி கொடுத்துவிட்டேன். அடகு வைத்ததால் நகையை அடிக்கடி திருப்பி கேட்டதால் பிரச்சனை என்றால் சரியல்ல. நீங்கள் 2 வது எதிரியின் நகையை திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து எவ்வளவு நேரத்தில் உங்களுக்கு தகவல் கிடைத்தது என்றால் சம்பவம் நடந்தவுடன் தகவல் சொன்னார்கள் காலை 7.00 மணி இருக்கும். சம்பவம் பற்றி உடனே புகார் கொடுத்தீர்கள் என்றால் புகார் கொடுத்தேன் உடனே விசாரித்தார்கள். போலிசார் உங்களை மருத்துவமனைக்கு

போக சொன்னார்களா என்றால் நானே அழைத்து சென்றேன். எதில் சென்றீற்கள் என்றால் பஸ்ஸில் சென்றேன். பின்பு ஆட்டோவிலும் சென்றேன். நீங்கள் மருததுவமனைக்கு எப்போது சென்றீற்கள் என்றால் 12.00 மணி இருக்கும். மருத்துவமனைக்கு உங்களுடன் வேறு யார் வந்தார் என்றால் நானும், என் மனைவியும் மட்டும் தான் சென்றோம். மருத்துவமனைக்கு போலிசாரிடம் புகாரை எவ்வாறு கொடுத்தீற்கள் என்றால் வாக்குமூலமாக கொடுத்தேன் என் மனைவி கையெழுத்திட்டார். சம்பவத்திற்கு முன்பாக நீங்கள் எதிரியை அடித்ததாக வழக்கு உள்ளது என்றால் சரிதான். நீங்கள் மேற்படி வழக்கில்இருந்து தப்பிப்பதற்காக உங்கள் மனைவிக்கு நீங்களே காயத்தை ஏற்படுத்தி பொய்யாக வழக்கு கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் சொத்து கேட்டு எந்த தகராறும் செய்யவில்லை, சொத்தை கொடுத்துவிட்டிற்கள், நகை கேட்டு தான் பிரச்சனை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

CC.No.97/2017

Deposition Of Witness for

Prosecution PW 4
Defense
Court

Name நீலாவதி

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of November 2021.

நான் எடுப்பூரில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் என்னுடைய மாமியார். ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய மச்சான். வழக்கின் மற்றொரு எதிரியை தெரியும் உறவினர். 28.07.2015 ஆம் தேதி காலை 7.00 மணிக்கு அ.சா.1 அவருடைய வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி அ.சா.1யை தெருவில் இழுத்து போட்டு கையால் தலை முடியை பிடித்து இழுத்து அடித்தார். இழுத்து அடித்ததில் அவருக்கு வலது காலில் காயம் ஏற்பட்டது. சம்பவத்தின் போது நானும், என் கொழுந்தன் விஜயகுமார், என்னுடைய கணவரும் அ.சா.1 வீட்டில் இருந்தோம். தேவடியாமவளே, புண்ட மவளே என அசிங்கமாக பேசி, கொல்லாமல் விடமாட்டேன் என அ.சா.1 கூறினார். பொன்ரேகா பிடித்து கொள்ள என்னுடைய மச்சான் அ.சா.1 யை அடித்தார். என் கணவர் தடுக்க சென்ற போது அவருக்கும் வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. எனது கணவருக்கு காயம் லேசாக இருந்ததால் சிகிச்சைக்கு செல்லவில்லை. என்னுடைய மாமனார் தான் சொத்தை பார்த்து வருகிறார். எதிரிகள் இருவரும் சொத்தில் பங்கு கேட்டு அவ்வாறு அடித்தார்கள். யாரோ தகவல் சொல்லி என்னுடைய மாமனார் வந்து அத்தையை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 ன் வீட்டிற்கும் உங்கள் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 20 அடி இருக்கும். ஆஜர் எதிரிக்கு ஆறு மரக்கா நிலம் உங்கள் மாமனார் கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவத்தின் போது வேறு யார் இருந்தார்கள் என்றால் பக்கத்து வீட்டுகாரர்கள் 5, 6 பேர்

இருந்தார்கள். அ.சா.1 ன் வீட்டிற்கு கீழ்புறம் யார் வீடு உள்ளது என்றால் தாமஸ் நாடார் என்பவர் வீடு உள்ளது. அ.சா.1 ன் வீட்டிற்கு மேல்புறம் யார் வீடு உள்ளது என்றால் ராமசாமி நாடார் வீடு உள்ளது. அ.சா.1 ன் வீட்டிற்கு வடபுறம் யார் வீடு உள்ளது என்றால் கோபி நாடார் வீடு உள்ளது. அ.சா.1 ன் வீட்டிற்கு தென்புறம் யார் வீடு உள்ளது என்றால் பெருமாள் நாடார் வீடு உள்ளது. சம்பவம் நடந்தவுடன் யார் புகார்மனு அளித்தார் என்றால் என் அத்தான் கொடுத்தார். காவல்நிலையத்திற்கு யார் உடன் சென்றார் என்றால் என் அத்தையும், மாமாவும் சென்றார்கள். காவல்நிலையம் சம்பவ இடத்தில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் 3 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் பற்றி உங்கள் மாமனாருக்கு யார் தகவல் சொன்னது என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். மாமனார் எதில் அழைத்து சென்றார் என்றால் முதலில் பைக்கிலும், பின்னர் ஆட்டோவிலும் அழைத்து சென்றாா். சம்பவத்திற்கு பிறகு உங்கள் மாமனார், மாமியார், உங்கள் கணவர் ஆகியோர் எதிரியை தாக்கியதாக வழக்கு உள்ளது என்றால் சரிதான். உங்கள் வீடு எதிரியின் வீட்டிற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் கீழபுறம் உள்ளது. உங்கள் வீட்டின் இ.பி லைன் எதிரி வீடு வழியாக வருவதால் அவருடன் விரோம் உள்ளது என்றால் சரிதான். எதிரி மேற்படி இ.பி லைனை மாற்றி தருமாறு உங்களிடம் கேட்டார் என்றால் சரிதான். இ.பி லைன் பிரச்சனையால் உங்களுக்குள் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். எதிரி பொன்ரேகா நகையை உங்கள் மாமனார், மாமியார் அடகு வைத்தார்கள் என்றால் தெரியாது. நகை கொடுக்காததால் பிரச்சனை என்றால் சரியல்ல. இ.பி லைன் பிரச்சனையை மனதில் வைத்து கொண்டு எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள், சம்பவம் நடைபெறவில்லை, எதிரிகள் கொடுத்த வழக்கில் இருந்து உங்கள் கணவரை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சி சொல்கீறிர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**